DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 470/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | தவமல்லி |
| Father / Husband Name | சரவணன் |
| Village | கூடலூர் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 34 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.03.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கூடலூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என் கணவர் ஆவார். தேதி மாதம் ஞாபகம் இல்லை. கடந்த வருடம் ஒரு நாள் காலை 10.00 முதல் 11.00 மணிக்குள் நான் தண்ணீர் எடுக்க சென்றபோது தவறி கீழே விழுந்துவிட்டேன். அதில் எனக்கு கை உடைந்துவிட்டது. பின்னர் மருத்துவமனைக்கு சென்றேன். எனக்கும் என் கணவருக்கும் பிரச்சனை இருந்ததால் தவறுதலாக நான் என் கணவர் மீது பொய்யாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அந்த** புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் **அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 07.05.2025 ம் தேதி குட்நைட் கம்பெனியில் நான் வேலைக்கு சென்றேன் என்றால் ஆமாம். 08.05.2025 ம் தேதி காலை ஆஜர் எதிரி என் கணவர் என்னை வேலைக்கு போக வேண்டாம் என்று சொன்னார் என்றால் ஆமாம். அன்றை தினம் மதியம் 3.00 மணிக்கு வந்து என்னை வேலைக்கு போக வேண்டாம் என்றும் மீறி சென்றால் அவ்வளவுதான் என்று கட்டையால் எனது இரண்டு கைகளிலும் அடித்தாரா என்றால் இல்லை. அதில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் கீழே விழுந்ததால் ஏற்பட்டது. நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன விவரங்களை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி என் கணவர் என்பதால் அவருடன் சமாதானமாக சென்றுவிட்டு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**
**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused ... I admitted by the witness to be correct.

12/3/26
Judicial Magistrate No.II
Madurantakam

S தவமல்லி

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 470/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மோகன் |
| Father / Husband Name | ஏழுமலை |
| Village | சித்தாமூர் |
| Taluk | செய்யூர் |
| Age | 54 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.03.2026**

**முதல் விசாரணை**

1.)நான் தற்போது மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து வருகிறேன். மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் 2025 ல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த பார்த்தீபன் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை பற்றி நன்கு தெரியும். தற்போது அவர் பணி இட மாறுதல் ஆகி சென்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 08.05.2025 ம் தேதி மாலை 6.05 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் பார்த்தீபன் நிலைய பொறுப்பில் இருந்தபோது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சை பெற்ற தவமல்லி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 162/2025 BNS பிரிவுகள் 296 (b) 118(1) 351(3) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.2 ஆகவும் அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வேதகிரி மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகசர் அசாஆ 4 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை தேடிவந்த நிலையில் 09.05.2025 மதியம் 1.00 மணிக்கு எதிரி வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் வழக்கில் காயம் பட்ட தவமல்லிக்கு விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழங்கிய சசிபிரியா என்பவரை **(அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் காயம் பட்ட நபருக்கு மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான BNS பிரிவுகள் 296 (b) 118(1) 351(3 இருந்து BNS பிரிவுகள் 296 (b) 118(2) 351(3) ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அ றிக்கை தாக்கல் செய்துள்ளார். (**அந்த சட்டப்பிரிவு**

P. m[illegible]

[signature] 12/3/26

**மாறுதல் அ றிக்கை அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது BNS பிரிவுகள் 296 (b) 118(2) 351(3) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

3. நான் இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சக அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

R. Murugesan

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.II
Madurantakam
12/3/26